# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 33 / 2022

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 11–08–2025.

பெயர் = தனலெட்சுமி வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.–

(1) நான் என் அப்பா மீதும், என் அப்பாவின் இரண்டு தாரத்து பிள்ளைகள் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பாமீது தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் அப்பாவுடன் பிறந்த அத்தைகள் எத்தனை பேர் என்றால் அத்தைகள் கிடையாது. என் அப்பாவை பெற்ற தாத்தா எப்போது இறந்தார் என்பது எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து மேற்படி விவரம் தெரியாது என்றால் சரிதான். என் அப்பா மற்றும் சித்தப்பா ஆகியோர்களிடையே பாகம் எப்போது நடந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். என் அப்பா சொத்து பற்றிய விவரம் எப்போது தெரியும் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த 3 மாதத்திற்கு முன்னர் தெரியும். தாவா சொத்திலுள்ள வீடு என் தாத்தா கட்டிய பூர்வீக வீடா என்றால் இல்லை. இடம் என் தாத்தா இடம். வீடு என் அப்பா மற்றும் நாங்கள் சேர்ந்து கட்டினோம் என்று சாட்சி கூறுகிறார். எனக்கு 11 வயது இருக்கும்போது மேற்படி வீடு கட்டப்பட்டது. தாவா வீடு போக வேறு வீடு என் அப்பாவிற்கு உள்ளதா என்றால் இல்லை. இந்த வீட்டில்தான் குடியிருந்து வந்தோமா என்றால் ஆமாம். எவ்வளவு காலம் தாவா வீட்டில் குடியிருந்து வந்தோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் அப்பாவிற்கு தாவா வீடு போக நஞ்சை, புஞ்சையில் எத்தனை ஏக்கர் இடம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. நஞ்சை புஞ்சை இருக்கிறதா என்றால் இருந்தது.

(2) அதனை என் அப்பா விற்றுவிட்டாரா என்றால் ஆமாம். மேற்படி இடங்களை எப்போது விற்றார் என்று எனக்குத் தெரியுமா என்றால் 2012ல் எனக்கு திருமணம் ஆனது அதற்கு முன்பாகவே விற்றுவிட்டார். எப்போது விற்றார் என்ற விவரம் தெரியாது என சாட்சி கூறுகிறார். நஞ்சை, புஞ்சை இடங்களை விற்றுவிட்டார் என்ற விவரம் நான்கு வருடத்திற்கு முன்னர் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். யாருக்கு விற்றார் என்ற விவரம்

எனக்குத் தெரியாது. யாருக்கு விற்றார் என்று வில்லங்கம் எதுவும் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள 6ம் பிரதிவாதி என் ஊர்க்காரர்தான். 6ம் பிரதிவாதி தாவா வீட்டை வாங்கியபிறகுதான் என் அப்பா காலி செய்தாரா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அப்பா தற்போது இருக்கிறாரா என்றால் ஆமாம். 2 முதல் 5 பிரதிவாதிகள் இருக்கிறார்களா என்றால் ஆமாம். கற்பகபாண்டியன் (2ம் பிரதிவாதி) யார் என்றால் என் உடன்பிறந்த அண்ணன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2ம் பிரதிவாதி கையெழுத்து செய்துள்ளாரா என்றால் ஆமாம். தாவா வீட்டை விற்பனை செய்த விவரம் எனக்கும் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றாலும், என் அப்பாதான் தாவா வழக்கை தாக்கல் செய்ய சொன்னதால்தான் அவர்களை பிரதிவாதிகளாக காண்பித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திலுள்ள வீட்டை என் அப்பாதான் அவருடைய சுய சம்பாத்தியத்தில் கட்டி அவர் பெயரில்தான் ரசீதுகள் எல்லாம் இருந்தது என்றாலும், தற்போது மார்க்கெட் மதிப்பு அதிகமாகிவிட்டதால் இவ்வழக்கு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என் அப்பா பெயரில் உள்ள ஆவணங்களை 6ம் பிரதிவாதி சரிபார்த்து வாங்கிய பிறகு தான் அவரது பெயரில் தாவா சொத்து ஆவணங்கள் மாறியுள்ளது என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு 2019ம் வருடத்திலேயே அனுப்பினேன் என்றால் சரிதான். இந்த வழக்கை உடனடியாக தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து 1 முதல் 5 பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் எந்த காலத்திலும் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. அதனால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.08.11 17:02:01 +0530